# நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர்!

## நேற்று முன்தினம் (6 – 8 – 2025) நிகழ்வுகள்!



**1. பள்ளி போக்குவரத்து வாகனங்களை முறையாக ஆய்வு செய்கிறதா ஒன்றிய அரசு?**

**திமுக துணை பொதுச் செயலாளர் திருச்சி சிவா கேள்வி**



பள்ளி போக்குவரத்தின் பாதுகாப்பு மற்றும் ஒழுங்குமுறையை உறுதி செய்யும் சீரான ஒழுங்குமுறை சட்டங்கள் இல்லை என்பது குறித்து திமுக துணை பொதுச் செயலாளர் திருச்சி சிவா மாநிலங்கலவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

வாகனங்களின் தரநிலை, ஓட்டுநர் தகுதிகள் மற்றும் பயணிகள் வரம்புகள் குறித்த வரம்புகளை பள்ளிகள் சரியாக பயன்படுத்துகின்றனவா? அதற்கான ஆய்வுகளை ஒன்றிய அரசு முறையாக செய்கிறதா என அவர் கேட்டுள்ளார்.

பள்ளி பகுதிகளில் வேகத் தடைகள், அறிவிப்பு பலகைகளை நிறுவுதல் உள்ளிட்ட விரிவான பள்ளி பகுதி பாதுகாப்பு தரநிலைகளை அரசிட இருக்கும் திட்டங்கள் என்ன எனவும் அவர் கேட்டுள்ளார்.

**2. ஆதார் அட்டை பயோமெட்ரிக்கில் தொடரும் சிக்கல்கள் தவிக்கும் பயனாளிகள்.. தீர்வில் தாமதம் ஏன்?**

**திமுக துணை பொதுச் செயலாளர் ஆ. இராசா குற்றச்சாட்டு**



ஆதார் அட்டைகளின் பயோமெட்ரிக் சரிபார்ப்பில் எழும் சிக்கல்கள் குறித்து திமுக துணை பொதுச் செயலாளர் ஆ. இராசா மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

பயோமெட்ரிக் சரிபார்ப்பில் அனுமதி இல்லாததால் பல்வேறு திட்டங்களின் கீழ் உண்மையான பயனாளிகளின் மனுக்கள் நிராகரிக்கப்படுகின்றன என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

மங்கலான கைரேகைகள் மற்றும் பழைய சரிபார்ப்பு கருவியின் கோளாறுகளால் பெண்கள் மற்றும் மூத்த குடிமக்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்பதால் அவற்றை சரிசெய்ய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

**3. பெரம்பலூரில் இரயில்வே முன்பதிவு மையம் அமைத்திடுக!**

**பெரம்பலூர் அருண் நேரு கோரிக்கை**



பெரம்பலூரில் கணினிமயமாக்கப்பட்ட இரயில் பயணிகள் முன்பதிவு மையம் (PRS) இல்லாதததால் மக்கள் பிற மாவட்டங்களுக்கு சென்று முன்பதிவு செய்து சிரமப்படுவதை சுட்டிக்காட்டி நாடாளுமன்றத்தில் திமுக பெரம்பலூர் மக்களவை தொகுதி உறுப்பினர் அருண் நேரு கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் பெரம்பலூரில் முன்பதிவு மையம் அமைக்கக் கோரி பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின்மீது எடுப்பட்ட நடவடிக்கை என்ன என்று கேட்டுள்ள அருண் நேரு, விரைவில் ஒன்றிய அரசு ஆய்வுகள் நடத்தி பெரம்பலூரில் ஒரு முன் பதிவு மையத்தை நிறுவ வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளார்.

**4. இரயில்வே லெவல் கிராஸிங்களில் விபத்துகளை தடுக்க துரித நடவடிக்கை**

**வேலூர் கதிர் ஆனந்த் கேள்வி**



அதிகரித்து வரும் இரயில் போக்குவரத்து மற்றும் சாலை வாகனப் போக்குவரத்து காரணமாக வேலூர் மக்களவைத் தொகுதி, காட்பாடி அருகே லத்தேரி ரயில் நிலைய லெவல் கிராசிங்கில் விபத்து அபாயம் இருப்பதை சுட்டிக்காட்டி அதற்கு தக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேலூர் திமுக மக்களவை உறுப்பினர் கதிர் ஆனந்த் கோரிக்கை வைத்துள்ளார்.

தமிழ்நாடு முழுவதும் இன்டர்லாக் செய்யப்படாத லெவல் கிராசிங்குகளில் அதிக விபத்துகள் நடக்கின்றன என்றும் அவற்றை தடுக்க ஒரு ROB அல்லது RUB கட்டுவதன் மூலம் லெஅல் க்ராஸிங்கை அகற்ற முடியும் என்றும் அவர் கூறியுள்ளார். மேலும் தேசிய நெடுஞ் சாலை-75 இல் காட்பாடி சந்திப்பில் உள்ள சாலை - ரயில் பாலத் திட்டத்தின் நிலை, அதற்கு ஒதுக்கப்பட்ட நிதி, டெண்டர் இறுதி செய்யும் தேதி மற்றும் கட்டி முடிக்கப்பட இருக்கும் தேதி குறித்தும் கேட்டுள்ளார்.

**5. சரக்கு இரயில்களின் வேகத்தை அதிகப்படுத்த நடவடிக்கை**

**வடசென்னை கலாநிதி வீராசாமி கோரிக்கை**



சரக்கு இரயில்கள் மற்றும் புறநகர் பயணிகள் இரயில்களின் வேகத்தை அதிகப்படுத்தும் மிஷன் ரப்தார் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட வழித்தடங்கள் குறித்து வடசென்னை மக்களவை உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

வடக்கு மற்றும் மேற்கு மண்டலங்களுடன் ட்லுப்பிடும்போது, இத்திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு பாகுபாடுகள் இல்லாத முறையான ஒதுக்கீடு கிடைக்க வேண்டும் என வலியுறுத்தி இருக்கிறார்.

சென்னை-மதுரை, சென்னை-கோவை மற்றும் திருச்சிராப்பள்ளி -ராமேஸ்வரம் போன்ற தமிழ்நாட்டின் முக்கிய நெரிசலான வழித்தடங்களில் போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் ஒன்றிய அமைச்சகம் இப்பணியை வேகமாக முடிக்கவேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

**6. தொழில்நுட்ப பூங்காக்களை இரண்டாம் கட்ட நகரங்களுக்கு மாற்றுக!**

**சேலம் செல்வ கணபதி கோரிக்கை**



டிஜிட்டல் வளர்ச்சியின் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வதற்கேற்ப மென்பொருள் தொழிநுட்ப பூங்காங்கள் தங்களை தகவமைத்து கொள்வது குறித்து திமுக சேலம் மக்களவை உறுப்பினர் செல்வகணபதி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

மென்பொருள் தொழிநுட்ப பூங்காங்கள் தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் அவை சார்ந்த சேவைகளை இரண்டாம், மூன்றாம் கட்ட நகரங்களுக்கு மாற்றுவதை ஊக்குவிக்க வேண்டும் என வலியுறுத்தி இருக்கும் அவர் இதற்காக அரசு சுமார் 17 லட்சம் சதுர அடி இடத்தை அரசு ஒதுக்கியுள்ளது என்பது குறித்த தகவல்களையும் கேட்டுள்ளார். மேலும் நாடு முழுவதும் ஒன்றிய அரசு உருவாக்கியுள்ள 24 தொழில்முனைவோர் மையங்களை குறித்தும் கேள்வி எழுப்பியுள்ளார்.



முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட திமுக சார்பில் மாவட்டக்கழகச்செயலாளர் கோ தளபதி எம்.எல்.ஏ. தலைமையில் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பி டி ஆர் பழனிவேல் தியாகராஜன் முன்னிலையில் மதுரை சிம்மக்கல்லில் உள்ள அன்னாரது திருஉருவ சிலைக்கு கழக நிர்வாகிகளுடன் அமைதி பேரணியாக சென்று மாலை அணிவித்து மரியாதை செலுத்திய போது எடுத்த படம் உடன் கழக நிர்வாகிகள் பொன் முத்துராமலிங்கம், வ. வேலுசாமி, பெ. குழந்தைவேலு, மா ஜெயராம், ஒச்சு பாலு, மேயர் இந்திராணி, சின்னம்மாள், மூவேந்திரன், ராகவன், முருகவேல் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கடலூர் மாவட்டத்தில் பள்ளி தலைமையாசிரியர்களுடனான

# மாநில அளவிலான அடைவுத் திறன் மீளாய்வுக் கூட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது!

கடலூர், ஆக. 8–

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் முன்னிலையில் கடலூர் மாவட்டம், குமராபுரம் கிருஷ்ணசாமி பொறியியல் கல்லூரி அரங்கத்தில் பள்ளி தலைமையாசிரியர்களுடனான மாநில அளவிலான அடைவுத் திறன் மீளாய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் (06.08.2025) நடைபெற்றது.

தொடர்ந்து, கடலூர் மஞ்சக்குப்பத்தில் அரசுப் பள்ளி மாணவ, மாணவியர்கள் தங்கிபயிலும் வண்ணம் ரூ.19.33 கோடி மதிப்பீட்டில் வகுப்பறைகள் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கென தனித்தனியான விடுதி வசதிகளுடன் கட்டடங்கள் கட்டப்பட்டு வருவதை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வி மற்றும் மருத்துவத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து பல்வேறு சிறப்புத் திட்டங்களை அறிவித்து அதனை கடைகோடி மக்களுக்கும் கொண்டுசேர்க்கும் வகையில் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழக மாணவர்களின் நலனை கருத்தில்கொண்டு பொருளாதார ஏற்றத்தாழ்வின்றி உயர்தரமான கல்வியினை பயில வேண்டும் என்பதற்காகவும், மாணாக்கர்கள் கல்வி கற்பதற்கான சிறந்த சூழ்நிலைகளை ஏற்படுத்தி தரவேண்டும் என்பதற்காக இல்லம் தேடி கல்வி, எண்ணும் எழுத்தும் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை ஏற்படுத்தியுள்ளார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பள்ளி தலைமையாசிரி யர்களுக்கான மாநில அளவிலான அடைவுத் திறன் தேர்வு குறித்து ஆய்வுக்கூட்டம் மேற்கொள்ளப்படுகிறது. அந்த வகையில் 20 மாவட்டங்களில் நிறைவு செய்து, இன்று 21ஆவது மாவட்டமாக கடலூர் மாவட்டத்தில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள 9,80,340 பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி முன்னேற்ற அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த மாநில அளவிலான அடைவுத் தேர்வின் அறிக்கை பள்ளி வாரியாக தனித்தனியாக வெளியிடப்பட்டுள்ளது. இப்பட்டியலில் கடலூர் மாவட்டத்தினை பொறுத்தவரை விருத்தாசலம், மங்களூர், அண்ணாகிராமம், குமராட்சி, பரங்கிப்பேட்டை வட்டாரங்களை சேர்ந்த பள்ளிகள் முன்னிலையில் உள்ளது. அடுத்த நிலையில் ஸ்ரீமுஷ்ணம், புவனகிரி, கீரப்பாளையம், கம்மாபுரம் ஆகிய வட்டாரங்களும், கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய வட்டாரங்களாக கடலூர், காட்டுமன்னார்கோயில், பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி ஆகியவை உள்ளன.

அரசு பள்ளி மாணவர்களுக்கு கற்றல் முறையாக ஆசிரியர் கற்றுக் கொடுத்தாரா என்பதை சோதிக்க ஒவ்வொரு ஆண்டும் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாநில அளவிலான அடைவுத் (SLAS) தேர்வானது மாணவர்களுக்கு நடைபெறுகிறது. இந்த தேர்வில், மாணவர் பெறும் மதிப்பெண்ணை வைத்தே ஆசிரியரின் தரம் நிர்ணயம் செய்யப்படுகிறது. மாணவர்கள் எடுக்கும் மதிப்பெண் அடிப்படையில், சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் கற்றல் அடைவு திறன் பட்டியல் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுவதுடன், பள்ளி அளவிலும் பட்டியல் வெளியிடப்படுகிறது. இதனால் அப்பள்ளியில் மாணவர்களின் கற்றல் திறன் குறித்தும், முன்னேற்றம் குறித்தும் தெரிந்து கொள்ளலாம்.

இத்தேர்வில் மாணவர்கள் நல்ல முறையில் மதிப்பெண் பெறுவதற்காக ஆசிரியர்கள் மேற்கொள்ளும் பயிற்சி, சிறப்பு வகுப்புகள் குறித்து தலைமையாசிரியர்கள் எடுத்துரைத்தனர்.

கடந்த ஆண்டு 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் கடலூர் மாவட்டமானது 10ஆவது இடம் பிடித்து முந்தைய ஆண்டுகளை காட்டிலும் முன்னேற்றமடைந்துள்ளது. அடுத்த வரும் தேர்வில் முதல் 5 இடங்களுக்குள் எடுக்க எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமன்றி "கோடையில் கற்றல் கொண்டாட்டம்" என அரசுப் பள்ளி மாணவர்களின் கோடை விடுமுறையினை பயனுள்ள வகையில் பல்வேறு திறன்களை வளர்த்திடும் வகையிலும், மற்ற மாவட்டத்திற்கு முன்னுதாரணமாகவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சிறப்பாக மேற்கொண்டுள்ளார். தலைமையாசிரியர்கள் பள்ளி வளாகத்தினை தனது முழுக்கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆசிரியர்களுடன் அவ்வப்போது மாணவர்களின் கற்றல்திறன்களை மேம்படுத்துவது குறித்து ஆய்வுக் கூட்டங்கள் மேற்கொள்ள வேண்டும். தலைமையாசிரியர்கள் பள்ளிகளில் முறையாக வகுப்புகள் நடைபெறுவதை கண்காணித்திட வேண்டும். மேலும் தேவைக்கேற்ப வகுப்புகளை ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

கடலூர் மாவட்டத்தில் கடந்த கல்வியாண்டில் 12ஆம் வகுப்பில் அரசுப் பள்ளியில் பயின்ற 193 மாணவர்கள் முதன்மை கல்வி நிறுவனங்களில் உயர்கல்விக்காக சேர்ந்துள்ளனர். கடலூர் மாவட்டமானது மாநில அளவிலான அடைவுத் திறன் தேர்வில் இரண்டாமிடம் பெற்றுள்ளது. கடலூர் மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் விதமாக அமைந்துள்ளது. பள்ளி ஆசிரியர்கள் முன்னெடுப்பே இந்நிலைக்கு சாத்தியமானது. அனைத்து மாணவர்களுக்கும் சிறந்த கல்வியினை வழங்கிட தமிழக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக செயலாற்றிட வேண்டும் என பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநில பெற்றோர்– ஆசிரியர் கழக துணைத் தலைவர் முத்துக்குமார், பயிற்சி ஆட்சியர் மாலதி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் எல்லப்பன், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் பழனி, மாவட்ட கல்வி அலுவலர்கள், தலைமையாசிரியர்கள், பள்ளிக்கல்வித் துறை சார்ந்த அலவலர்கள் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர்

# இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிவிப்பு!



நாமக்கல், ஆக. 8–

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் நாமக்கல் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் எனது தலைமையிலும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் முன்னிலையிலும்; திருச்செங்கோட்டிலுள்ள நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் இன்று(08.08.2025–வெள்ளிக் கிழமை) காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளது.

அதுசமயம் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் பி.எஸ். சீனிவாசன் கலந்து கொண்டு சிறப்புரை யாற்ற உள்ளார். ஆகவே இக் கூட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.




தேனி வடக்கு மாவட்டம் தேனி வடக்கு ஒன்றியம் பழனிசெட்டிபட்டி பேரூரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் அருள்வாசகன் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்தனர் உடன் வார்டு செயலாளர்கள், கவுன்சிலர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம்ஆண்டிபட்டி பேரூர் பகுதியில்முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாவது நினைவு தினத்தை முன்னிட்டு அமைதி பேரணியாகச் சென்று கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர் இந்த நிகழ்ச்சியில் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம் . பேரூர் செயலாளர் சரவணன். தெற்கு மாவட்ட இளைஞரணி விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சேது ராஜா.தெற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரகாஷ் இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் செஞ்சுரி செல்வம். ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ் டி எஸ் சிவா.அர்ஜுன்.தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் அதிபன் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஞானசேகரன்..மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. அயலக அணி

# கரூர் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா அறிவிப்பு!

கழகத்தலைவர்அவர்களின்ஆணைப்படி–மாவட்டச்செயலாளர்ஒப்புதலோடுதி.மு.க.அயலகஅணியின் கரூர்மாவட்டம்–கரூர்மாநகரஅமைப்பாளர்–துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கரூர் மாவட்டம்**
**கரூர் மாநகரம்**

அமைப்பாளர் - பி.செந்தில்குமார்,
42, ஆதிவிநாயகர் தெரு,
கரூர் அஞ்சல்,
கரூர் தாலுக்கா,
கரூர் மாவட்டம் - 639001

துணை அமைப்பாளர்கள் - 1) என். இம்தியாஸ் ரிஸ்வி 35 மஹாலக்ஷ்மி பார்க், 3-வது கிராஸ் காந்தி கிராமம் பசுபதிபாளையம் அஞ்சல் கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் - 639004, 2) எ. பிரேம் குமார், 12,17/எ, தாந்தோணி பஜார் தெரு, திருமாநிலையூர் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் - 639003 , 3)ரா.அசோகன், 23, பசுபதி லே அவுட் முதல் கிராஸ், கரூர் அஞ்சல், கரூர் தாலுக்கா , கரூர் மாவட்டம் - 639001, 4) எஸ்.கதிரேசன், 646/7பி - தெற்கு தெரு , சணப்பிரட்டி, எஸ். வெள்ளாளப்பட்டி அஞ்சல் , கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் - 639004 , 5) சி. அப்துல்லா , 44எ , ஜாமியா நகர் , பெரியகுளத்துப்பாளையம் , வெங்கமேடு அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் - 639006.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18.
நாள் : 06.8.2025

**எம்.எம்.அப்துல்லா**
செயலாளர்
தி.மு.க. அயலக அணி

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஆ. சஞ்சீவிராயன்

**ஆகஸ்ட் 8 (2021)**



**1964ஆம் ஆண்டு கழகத்தில் உறுப்பினராகி 55 ஆண்டுகளுக்கும் மேலாக கழகப் பணியாற்றியவர்.**

**சென்னை மாவட்டத்தில் எழும்பூர் மற்றும் திரு.வி.க.நகர் பகுதிகளில் 68வது வட்டம், 97வது வட்டம் ஆகிய வட்டச் செயலாளராகவும் மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**